Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.196/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW2** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | செய்யது அப்பாஸ் |
| Father/Husband Name | : | காஜா முகைதீன் |
| Village | : | மணல்வாடித்தெரு, தேவிப்பட்டினம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | Juice Shop |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09. 2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் தாலுகா தேவிபட்டினம் மணல்வாடி தெருவில் குடியிருந்து வருகிறேன். தேவிப்பட்டினம் பஜாரில் ஜுஸ் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் வழக்கம்போல எனது ஜுஸ் கடையை காலையில் 08.00 மணியிலிருந்து மாலை 04.00 மணிவரை வைத்து வியாபாரம் செய்து வருவேன். அந்த நேரம் கொரானா தொற்று காலம் என்பதால் 28.04.2021ம் தேதி மாலை 04.00 மணிக்கு எனது கடையை மூடிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை காலை 08.30 மணியளவில் திறந்தபோது என் கடைக்கு 2 கடைகள் தள்ளி ஒருவர் இறந்துகிடந்ததாக சொன்னார்கள். அதன் பிறகு நான் கடையை திறந்து வழக்கம்போல் வியாபாரம் செய்தேன். இறந்த நபரை யார் தாக்கியது என்று எனக்கு தெரியாது. மறுநாள் போலிசார் என்னிடம் விவரம் கேட்டார்கள், நான் தெரியாது என்று சொன்னேன்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில்  பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு  அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு  குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 28.04.2021ம் தேதி நான் எனது கடையை அடைத்துவிட்டு இரவு 09.00 மணிக்கு வீட்டிற்கு போக கிளம்பியபோது என் கடைக்கு பக்கத்தில் 45 வயது மதிக்கத்தக்க ஒருவர் நின்று கொண்டிருந்தார் என்றும் அப்போது ஆஜர்எதிரி அவரிடம் வம்பு செய்துவிட்டு பிரச்சனை செய்து கொண்டிருந்தார் என்றும் நான் அதை கண்டுகொள்ளாமல் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், அதன் பிறகு அரை மணிநேரம் கழித்து அந்த நபரை ஆஜர் எதிரி கத்தியால் குத்திவிட்டு அங்கிருந்து தப்பித்து சென்றுவிட்டார் என்றும், காயம்பட்ட நபரை தேவிப்பட்டினம் கிராம நிர்வாக அலுவலர் செந்திலும், அவரது உதவியாளர் முத்துவேல் என்பவரும் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சேர்த்தார்கள் என்றும், அங்கு அவர் சிகிச்சை பலன் இன்றி இரவு 11.00 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், இது குறித்து  தேவிப்பட்டினம் கிராம நிர்வாக அலுவலர் தேவிப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால்  இவ்வழக்கிலிருந்து எதிரியை காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –        இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.